16.07.2025 **OS.No. 196 / 2017**

**வா.சா. 1 பெயர்: சரஸ்வதி  க/பெ. கோவிந்தராஜ்**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார**

**குறுக்கு விசாரணை:**

நான் ஒலைப்பட்டியில் வசித்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் 2 பெண் 1 ஆண் ஆவார்கள். அவர்கள் பெயர் ஜானகி , விமலா, ரமேஷ் சரஸ்வதி ஆகிய நான் ஆவோம். யார் மீது வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் என் அப்பா மீது வழக்கு தாக்கல் செய்து உள்ளேன். எதற்காக வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் எனக்கான பாகத்தை கேட்டேன் தரவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்தேன். என்னுடன் பிறந்த சகோதரிகளுக்கு பாகம் கொடுத்தார்களா என்றால் யாருக்கும் கொடுக்கவில்லை. அவர்களும் சேர்ந்து எனது அப்பா மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் நான் மட்டும் போட்டு உள்ளேன். எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் சுமார் 20 வருடமாகிறது. திருமணம் ஆனது முதல் நான் எனது கணவருடன் ஓலைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது அப்பா வீட்டில் ஏதேனும் விசேஷம் இருந்தால் வந்து செல்வேன் என்றால் சரியல்ல. 15 நாள் அல்லது மாதத்திற்கு ஒரு முறை வந்து செல்வேன். திருமணம் ஆகி 13 வருடம் கழித்து 2017ல் வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் என்னவென்றால் பாகம் கேட்டு தரவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி 13 வருடத்தில் எனது அப்பாவிடம் பாகம் கேட்டு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை ஆனால் பொது நபர்கள் மூலம் பாகம் கேட்டேன். எனது திருமணத்தின் போது எனது அப்பா நகை மற்றும் சீர்வரிசை செய்து திருமணம் செய்து வைத்தார் என்றால் நகை போடவில்லை. என்னை போல் மற்ற சகோதரிகளுக்கும் நகை எதுவும் போடவில்லை. வழக்கு சொத்து பூர்வீக சொத்து என சொல்லியுள்ளதற்கு யார் பெயரில் உள்ளது என்றால் எனது தாத்தா துரைசாமி பெயரில் இருந்தது. எனது தாத்தா இறந்துவிட்டார். எனது தாத்தாவிற்கு சொத்து எவ்வாறு வந்தது என்றால் அது அவரது தகப்பனார் வழி வந்தது. எனது தாத்தா துரைசாமி பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் இருந்ததா என்றால் இல்லை . எனது அப்பா பெயரில் தான் உள்ளது. வழக்கு சொத்து எனது அப்பாவின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. 5 மற்றும் 6 ம் பிரதிவாதிகள் யார் என்றால் எனது அப்பாவின் நண்பர்கள். மேற்படி நான் குறிப்பிடுவது போல் அவர்கள் அப்பாவின் நண்பர்கள் இல்லை என்றாலும் அவர்கள் வழக்கு சொத்திற்கு பக்கத்து நிலத்து காரர்கள் என்றால் சரிதான். எந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண் 27 க்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து விஸ்தீரனம் எவ்வளவு என்றால் 3 ஏக்கர் 57 செண்ட் மற்றும் 25 செண்ட் ஆகியவை ஆகும். பிரதிவாதிகள் 5 மற்றும் 6 ஆகியோரின் நிலம் வழக்கு சொத்திற்கு இரு பக்கத்திலும் உள்ளது

என்றால் சரிதான். அது ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு விவசாயம் செய்து வருவதற்காக சென்று வருவதில் தொடர்ந்து பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. அவ்வாறு தொடர்ந்து சென்று வருவதில் அவர்களுக்கு பிரச்சனை என்பதால் எனது அப்பாவிடம் வழிக்காக கேட்டதை எனது அப்பாவும் ஒப்பு கொண்டார் என்றால் சரியல்ல. அதை எனது அப்பா சம்மதித்து அவர்கள் சென்று வர வழிக்காக 6 செண்ட் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 07.04.2014 ம் தேதி 5, 6 பிரதிவாதிகளுக்கு ஊத்தங்கரை சார்பதிவக எண் 1231/2014 என கிரையம் கொடுத்து பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வண்டி வழி என்று கிரையம் எதுவும் கொடுக்கவில்லை. மேற்படி பத்திரத்தில் என்னுடன் பிறந்த சகோதரர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு எனது அப்பாவிற்கும் 5,6 பிரதிவாதிகளுக்கும் நிலத்தில் போர் போடுவது சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. அவ்வாறு ஏற்பட்ட காழ்புணர்ச்சி காரணமாக எனது அப்பாவும் சகோதரரும் தூண்டிவிட்டதன் பேரில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. திருமணம் ஆகி 16 ஆண்டுகள் பாகம் கேட்காத நான் மேற்படி வழிக்காக 6 செண்ட் விட்ட பின்பு தான் வேண்டுமென்றே வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எனது அப்பாவும் சகோதரரும் முன்னிலையில் இருந்து தான் வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. கடந்த ஆண்டு 2 போக சாகுபடியில் என்ன செய்தேன் என்றால் நிலத்தின் தண்ணீர் தேங்கி இருந்ததால் விவசாயம் எதுவும் செய்யவில்லை. அதற்கு முந்தைய ஆண்டு என்ன பயிர் செய்யப்பட்டது என்றால் நெல் நட்டோம். நான் என்ன பயிர் செய்தேன் என்ற விவரம் தெரியாது என்றாலும், நான் திருமணம் ஆனதிலிருந்து எனது கணவர் வீட்டில் இருந்து வந்ததால் வழக்கு சொத்து பயிர் செய்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வில்லங்க சான்றும் போட்டு பார்த்த பின்பு வழக்கு சொத்து எனது அப்பா பெயரில் இருந்ததால் 5,6 பிரதிவாதிகள் வழிக்காக கிரையம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. எனது திருமணத்தின்போதே எனக்கு செய்ய வேண்டிய சீர்வரிசை செய்து விட்டதால் வழக்கு சொத்தின் பாகத்தினை விட்டுக்கொடுத்து விட்டேன் என்றாலும் அதனால் வழக்கை தாக்கல் செய்ய உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனது பேரிலோ , எனது சகோதரிகள் பேரிலோ வழக்கு சொத்திற்கு கூட்டாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை பொருத்து எங்கள் பெயரில் எவ்வித கூட்டு ஆவணமும் இல்லை என்பதால் 5, 6 பிரதிவாதிகள் எங்களிடம் கேட்டு கிரையம் பெற வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 5ல் ஒரு பாகம் வேண்டுமென கேட்டு உள்ளேன். மீதம் உள்ள நான்குபாகம் யார் யாருக்கு என்றால் எனது சகோதரிகள் இரண்டு பேர், சகோதரர் மற்றும் அப்பா ஆகியோர்களுக்கு ஆகும். எனது அப்பா மற்றும் சகோதரருக்கு பாகம் உள்ள நிலையில் அவர்களுக்கு உரிய சொத்தை கிரையம்

கொடுக்க உரிமை உள்ளது என்றாலும், அதை கேட்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வழிப்பாதை விற்ற விவரம் அப்போதே எனக்கும், எனது சகோதரிகளுக்கும் தெரியும் என்றாலும் அப்போது நல்ல முறையில் இருந்ததால் விட்டு விட்டு தற்போது வழக்கு தாக்கல் செய்து உள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை என்றால் சரியல்ல. 5,6 பிரதிவாதிகள் வண்டி பாதையை உரிய பணம் கொடுத்து கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி தொகை எனது அப்பா மற்றும் சகோதரர் பெற்றுக்கொண்டுதான் கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் பாகம் கொடுப்பதற்கு பிரதிவாதிகளுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றாலும் , கிரையம் பெற்ற வண்டி வழிப்பாதை ஆவணத்தை செல்லாது எனக் கோர எனக்குஉரிமை இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கும் 5,6 பிரதிவாதிகளுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணம் ஆக தான் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பொய் வழக்கு தாக்கல் செய்ததால் 5,6 பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.